## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை–பணியமைப்பு–மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட 2013–2014–ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்பு–ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககத்தில் சட்டப்பிரிவு துவங்குதல்– ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆதிந1)நலத்துறை

அரசாணை (நிலை) எண்.94

நாள்:11.11.2013
திருவள்ளுவர் ஆண்டு 2044
ஐப்பசி திங்கள் 25–ஆம் நாள்.
படிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடிதம் எண்.எச்4/13255/2013
நாள்: 30.05.2013.

---

ஆணை:

2013-2014-ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தொடர்பாக கீழ்க்காணும் புதிய அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

> "இத்துறையில் செயல்படுத்தப்படும் இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டம், வன்கொடுமை தடுப்புச் சட்டம், சாதிச்சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல், பணியமைப்பு நிர்வாகம் போன்றவற்றில் ஏற்படும் சட்டச் சிக்கல்களை தீர்க்கும் வகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் தலைமை அலுவலகத்தில் புதியதாக ஒரு சட்டப் பிரிவு ஏற்படுத்தப்படும். மாற்றுப் பணியில் (On Deputation basis) தலைமைச் செயலக சட்டத்துறையில் துணைச் செயலாளர் நிலையில் ஒருவர், 5 வருட அனுபவம் கொண்ட தலைமைச் செயலக பிரிவு அலுவலர் ஒருவர், அவர்களுக்கு உதவியாக ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் பணிபுரியும் ஒரு கண்காணிப்பாளர், ஒரு உதவியாளர், ஒரு தட்டச்சர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகியோர்களைக் கொண்டு இந்த சட்டப் பிரிவு செயல்படுத்தப்படும்."

(கு.தி.பா)...

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்து, உட்கட்டமைப்பு வசதிகளான குடிநீர், இணைப்புச்சாலைகள், வீட்டுமனைப்பட்டா, வீடுகள், பள்ளிகள், விடுதிகள், சுகாதார மையங்கள், சமுதாயக் கூடங்கள் போன்றவற்றை வழங்கி வருகிறது எனவும், நடைமுறையில் உள்ள இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம் தொடர்பான வழக்குகள், இத்துறை ஆசிரியர்களின் பணி சம்பந்தமான வழக்குகள், வன்கொடுமை தடுப்பு, சாதி சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் மற்றும் கொத்தடிமை மறுவாழ்வு சட்டம் – 1976 தொடர்பான வழக்குகள் ஏறக்குறைய 1600க்கும் மேல் நிலுவையில் உள்ளதாகவும் ஒவ்வொரு நாளும் இது போன்ற வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருவது துறைக்கு மிகுந்த அவப்பெயரை தருவதுடன் இது ஒரு தீர்வு காண இயலாத தலையாய பிரச்சனையாக உள்ளது என்றும், இது போன்ற சட்ட சிக்கல்களை தீர்வு காண்பதற்கு திறமை வாய்ந்த சட்ட வல்லுநர்கள் ஆதிதிராவிடர் நல இயக்ககத்தில் இல்லாத நிலையில் வழக்குகளை எதிர் கொள்ளவும் நீதிமன்ற அவமதிப்பு ஆணை போன்றவற்றை தவிர்க்கவும் சட்ட வல்லுநர்கள் அடங்கிய பிரிவு அமைப்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாக உள்ளது எனவும் தெரிவித்து, இவ்வாறான வழக்குகளில் சட்டரீதியான உடனடி தீர்வு காண்பதற்கு ஒரு சட்டப்பிரிவை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககத்தில் அமைக்கவும், அதற்கான தொடரும் மற்றும் தொடராச் செலவின வகையில் ரூ.19,27,036/-ஐ ஒப்பளிப்பு செய்யுமாறும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககத்தில் ஒரு சட்டப்பிரிவை அமைக்க, கீழ்க்காணும் 6 பணியிடங்களை தற்காலிகமாக பணியிடம் நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டிற்கு அல்லது தேவை உள்ள வரை, இதில் எது முந்தையதோ அது வரை புதியதாக தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது.

<u>சட்டப்பிரிவின் வடிவம்</u>

| வ. எண் | பணியிடங்கள் | தேவை மற்றும் தகுதி | நியமன முறை |
|---|---|---|---|
| 1. | சட்ட அலுவலர் | சட்டக் கல்வி பயின்று தலைமைச் செயலக சட்டத்துறையில் துணைச் செயலாளர் நிலையில் உள்ள அலுவலர் – 1 | தலைமைச் செயலக சட்டத் துறையில் இருந்து மாற்றுப் பணியில் நியமனம் செய்யப்படுவர். ஆதிதிராவிடர் நல இயக்ககத்தில் தொடர்ந்து பணிபுரிய ஆண்டுதோறும் பணிநீட்டிப்பு பெறப்பட வேண்டும். |
| 2. | உதவி சட்ட அலுவலர் | சட்டக் கல்வி பயின்று தலைமைச் செயலக சட்டத் துறையில் இருந்து பிரிவு அலுவலர் – 1 | |

| | | | |
|---|---|---|---|
| 3. | கண்காணிப்பாளர் | 1 | ஆதிதிராவிடர் நல இயக்ககத்தில் பணிபுரியும் பணியாளர்களை பணி மூப்பின்படி தேர்வு செய்து பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படுவர். |
| 4. | உதவியாளர் | 1 | |
| 5. | தட்டச்சர் | 1 | வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் முன்னுரிமைப் பட்டியல் பெற்று நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படுவர். |
| 6. | அலுவலக உதவியாளர் | 1 | |

4. மேலே பத்தி 3–ல் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள சட்டப்பிரிவிற்கு அலமாரி, நாற்காலி மற்றும் மேசை உள்ளிட்ட பொருள்கள் வாங்க தொடராச் செலவினமாக ரூ.1,00,000/– மற்றும் பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதரப் படிகளுக்கான தொடர் செலவினமாக ரூ.18,27,036/–ம் ஆக மொத்தம் ரூ.19,27,036/– (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து முப்பத்து ஆறு மட்டும்) அனுமதியளித்தும், 2013–2014–ஆம் ஆண்டில் இச்செலவினத்திற்கு ரூ.7,61,265/– (ரூபாய் ஏழு இலட்சத்து அறுபத்து ஓராயிரத்து இருநூற்றி அறுபத்தைந்து மட்டும்)–நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

<u>தொடராச் செலவினம்</u>

மேசை, நாற்காலி, அலமாரி போன்ற செலவினங்கள் ரூ.1.00 இலட்சம்

<u>தொடரும் செலவினம்</u>

| | | | |
|---|---|---|---|
| சட்ட அலுவலர் (துணைச் செயலாளர் நிலையில்) | 1 | ரூ.15600–39100+7600 த.ஊ | ரூ.44204x12= 5,30,448 |
| உதவி சட்ட அலுவலர் (பிரிவு அலுவலர் நிலையில்) | 1 | ரூ.15600–39100+5400 த.ஊ | ரூ.39920x12= 4,79,040 |
| கண்காணிப்பாளர் | 1 | ரூ.9300–34800+4800 த.ஊ | ரூ.26252x12= 3,15,024 |
| உதவியாளர் | 1 | ரூ.5200–20200+2800 த.ஊ | ரூ.14690 x12= 1,76,280 |
| தட்டச்சர் | 1 | ரூ.5200–20200+2400 த.ஊ+ 160 சிறப்பூதியம் | ரூ.14082 x12= 1,68,984 |
| அலுவலக உதவியாளர் | 1 | ரூ.4800–10000+1300 த.ஊ | ரூ.13105 x12= 1,57,260 |
| | | மொத்தம் தொடரும் செலவினம் | ரூ.18,27,036/– |

(த.தி.பா)...

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

| | |
|---|---|
| "2225-ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-01-ஆதிதிராவிடர் நலன்-001-நெறிப்படுத்தலும் நிருவாகமும்-I-திட்டத்தில் சேராதது-AC-தலைமையிடப் பணியாளர்கள் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை சம்பளங்கள்.<br>(து.தொ.கு.2225 01 001 AC 0106) | -ரூ.7,61,265/- |
| 05-அலுவலகச் செலவுகள்-05-அறைகலன்<br>(து.தொ.கு.2225 01 001 AC 0553) | -ரூ.1,00,000/- |

6. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களில் பணிபுரிவோர் அடிப்படை சம்பளம் மற்றும் விதிமுறைகளின்படி பிற படிகளையும் பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள். மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட சட்ட அலுவலர் மற்றும் உதவி சட்ட அலுவலர் பணியிடங்களுக்கான அலுவலர்களை தலைமைச் செயலக சட்டத்துறையிலிருந்து மாற்றுப்பணியில் பெற ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இது ஒரு "புதுத்துணைப்பணி" குறித்த (New Instrument of Service) செலவினமாகும். உரிய காலத்தில் இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு-செலவு பொது I) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்யத் தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு-செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்கும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் 2013-14ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைக்கான உரிய விளக்கக் குறிப்பினை நிதி (வரவு-செலவு பொது I) துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 3-ல் உள்ள சட்டப்பிரிவு முறையாக துவங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட சட்ட அலுவலர் மற்றும் உதவி சட்ட அலுவலர் பணியிடத்திற்கான தற்காலிக பணி விதிகளை (Adhoc Rules) வெளியிடுவதற்கான கருத்துருவை அரசிற்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(த.தி.பா)...

9. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சாரா குறிப்பு எண்.65053/CMPC/2013 நாள்.11.11.2013 மற்றும் கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண்.1882 (ஆயிரத்து எண்ணூற்று எண்பத்திரண்டு)–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர் .

<u>பெறுநர்</u>
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
செயலர், சட்டத்துறை, சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8
முதன்மை மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35/6.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை, சென்னை–9.
நிதித்(ஆதி(ம)பந/வ.செ.பொது–I/ வ.செ.பொது–II/மைமஆபி)துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஞா. தங்கம்
12.11.13
பிரிவு அலுவலர்.